(ஆ) அதனுடைய திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 390 வீடுகள்.

(ஆ) ரூ. 417.97 இலட்சம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு கட்டப்படும் வீடுகள் சுங்கத் தீர்வை பற்ற மண்டல நிர்வாகத்தின் டெபாசிட் ஓர்க்கா அல்லது 'ஹட்கோ' மூலமாக டெபாசிட் செய்யப்படும் ஓர்க்கா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'ஹட்கோ' மூலமாக வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டிருக்கிற திட்டங்கள்தான் நான் சொன்ன திட்டங்கள்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு கட்டப்படும் வீடுகள் சுங்கத் தீர்வை யற்ற ஏற்றுமதி மண்டலத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கா அல்லது உயர் அதிகாரிகளுக்கா ? இல்லையெனில் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் அந்தத் திட்டத்தில் உள்ள வீடுகளை அரசு ஒதுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, தாம்பரம் பகுதியில் பொதுமக்களுக்கு தனியாக பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நான் குறிப்பிட்டுச் சொன்ன திட்டம், சுங்கத் தீர்வை இல்லாத வணிக மண்டலத்தில் உள்ள, அதாவது இப்போது அமைந்துள்ள Free Trade Zone-ல் உள்ள தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் அனைவருக்கும் வழங்கப்பட கட்டப்படும் திட்டமாகும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

110—(*வினா எண் 9076) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தின் கீழ் பயனடைந்த ஊர்கள் யாவை ?

(ஆ) பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின் கீழ் சின்னசேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய ஊர்கள் பயனடைந்துள்ளன.

(ஆ) பயனடைந்தோர் எண்ணிக்கை 90.

1986 நவம்பர் 20]

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி நிறைந்த நெசவாளர் பெருமக்களைக் கொண்ட தொகுதியாகும். ஒரு நகர மன்றமும், 58 ஊராட்சி மன்றங்களும் உள்ளடங்கிய தொகுதி அது. அந்தத் தொகுதியில் உள்ள நகராட்சியின் ஒரு பகுதியில் அதிகமான நெசவாளர் பெருமக்கள் வாழ்கிறார்கள். மேலும் 15 ஊராட்சிகளிலும் நெசவாளர் பெருமக்கள் நிறைந்து வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழே, ஒவ்வொரு வீட்டுக்கும் எவ்வளவு பணம் ஒதுக்குகிறோம் ? அப்படி ஒதுக்கும் பணத்தில் ஏதாவது மானியம் வழங்கப்படுகிறதா ? மேலும் கூட்டுறவு சொசைட்டியின்கீழ் அவர்கள் வந்தால்தான் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நிலை இருக்கிறதென்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா? அல்லது தனித் தனியாக 10 அல்லது 20 பேர்கள் வீடு கேட்டால் கூட அவர்களுக்கு சேங்ஷன் செய்ய வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல, அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வீடும் 19,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. அதிலே 14,600 ரூபாய் ''ஹட்கோ'' கடன். 2,000 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

(முற்பகல் 9-50.)

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி தென்னாற்காடு மாவட்டத்திலே வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றியது. மாநில முழுவதும் விவரங்கள் தேவை என்றால் தனியாகக் கேள்வி போடவும்.